# ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு மறுகண்ணோட்டம்

*யோவான், பாவமன்னிப்புக்கென்று (மாற். 1:4; லூக். 3:3) மனந் திரும்புதலுக்கேற்ற (மத். 3:2) ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். அவரால் மனம் மாற்றப்பட்டவர்கள் விசுவாசித்து அல்லது மனந்திரும்பி(அவரது செய்தியை ஏற்றுக் கொண்ட)னர் என்பதாக சுவிசேஷ நூல்கள் அறிக்கை தராதிருப்பினும் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அவை அறிக்கை தருகின்றன (மத். 3:6; மாற். 1:5; லூக். 3:21; யோவா. 3:23; 4:1). அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்ற உண்மையிலிருந்து அவரது செய்தியை அவர்கள் விசுவாசித்து மனந்திரும்பினர் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடும்படி யோவான் கூறியதாக (சுவிசேஷங்களில்) எவ்விடத்திலும் எடுத்துரைக்கப் படவில்லை, ஆனால் மக்கள் அவ்வாறே செய்தனர் (மத். 3:6).*

*யோவான் போதித்த ஞானஸ்நானத்திற்கு இயேசு தம்மைக் கீழ்ப்படுத்தினார் (மத். 3:13-17). ஞானஸ்நானத்தின் மூலமாக இயேசு அறியப்பட்டார் என்று யோவான் தமது சாட்சியத்தைக் கொடுத்தார் (யோவா. 1:31). யோவான் பின்வரும் கூற்றுகளில் அநேகமாய் இயேசுவின் ஞானஸ்நானம் பற்றி மறைமுகமாய்க் குறிப்பிட்டு இருந்திருக்கலாம்: "இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்;" "சாட்சியிடுகிறவைகள் மூன்று: ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே" (1 யோவா. 5:6அ, 8அ).*

*இயேசு யோவானைக் காட்டிலும் அதிகமான மக்களை ஞானஸ்நானத் திற்குக் கொண்டு வந்திருக்கலாம் (யோவா. 3:22, 26; 4:1). இந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்று சுவிசேஷ நூல்கள் எடுத்துரைக்கின்றன, ஆனால் இவர்கள் விசுவாசித்து, மனந்திரும்பி அல்லது அறிக்கையிட்டதாகப் பதிவு எதையும் நாம் காண்பதில்லை. இவைகள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாததால் மட்டுமே, இவர்கள் இவைகளைச் செய்ததில்லை என்று நாம் முடிவு செய்வோமா? ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடப்பட்டு, மற்ற விஷயங்கள் குறிப்பிடப்படாதிருக்கும் பொழுது நாம் எப்படி ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியும்?*

*அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்று நாம் தைரியமாய்*

*உறுதிப்படுத்த முடியாது, ஆனால் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது மறைவான சுட்டிக்காட்டுதலையுடையதாய் இருக்கின்றது. யோவான் மற்றும் இயேசுவின் சீஷர்களானவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் (யோவா. 4:1). இயேசு தம்முடைய சீஷர்களின் மத்தியிலிருந்து தான் தமக்கு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (லூக். 6:13), இது அவர், (தம்மிடம்) ஞானஸ்நானம் பெற்றவர்களையே தமது சீஷர்களாகும் படி தேர்ந்து கொண்டார் என்று சுட்டிக்காட்ட வேண்டும்.*

## நடபடிகளில் ஞானஸ்நானம்

*நடபடிகளின் புத்தகத்தில் சில நிகழ்ச்சிகளில், மக்கள் மனந்திரும்பினர் அல்லது அறிக்கையிட்டனர் (எத்தியோப்பிய மந்திரியின் அறிக்கை என்பது அதிகாரப்பூர்வமானதாக நம்பப்படாதிருந்தால்) என்பது பற்றி எதுவும் கூறப்படாதிருக்கையில், அவர்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றதாக அறிக்கை தரப்பட்டுள்ளது. விசுவாசித்தல் என்பது ஞானஸ்நானத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 8:12; 18:8); ஆனால் மனந்திரும்புதல் என்பது ஞானஸ்நானத்துடன் ஒரே ஒரு முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (அப். 2:38) மற்றும் அறிக்கையிடுதல் என்பது இத்துடன் இணைந்து குறிப்பிடப்படவில்லை. அறிக்கையிடும்படி மக்களிடம் கூறப்பட்டதாக நடபடிகளின் புத்தகமானது எவ்வித எடுத்துரைப்பையும் ஏற்படுத்துவ தில்லை. விசுவாசித்தல் அல்லது ஞானஸ்நானம் என்பது மட்டும் குறிப்பிடப் படுகையில் மனந்திரும்புதலும் அறிக்கையிடுதலும் மறைமுகமாய்க் குறிப்பிடப்படுகின்றன என்பது உறுதி. இது, "விசுவாசித்தல்" என்ற வார்த்தை வருகையில், ஞானஸ்நானமும் மறைவாய்க் குறிப்பிடப் படுகின்றது - அல்லது ஞானஸ்நானம் மட்டும் குறிப்பிடப்படும் பொழுது விசுவாசித்தல் என்பதும் மறைவாய் உணர்த்தப்படுகின்றது - என்று சுட்டிக் காட்டுவதாக இருக்க வேண்டும்.*

*மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை இன்றி ஒரு மனிதர் இரட்சிக்கப்பட முடியாது என்றால், இயேசுவின் பிரசங்கித்தலுக்கு மக்கள் பதில்செயல் செய்த ஒவ்வொரு வேளையிலும் ஞானஸ்நானத்திற்குப் பதிலாக இந்தச் செயல்கள் ஏன் குறிப்பிடப்படவில்லை? இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்றால், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் (மதக் குழுக்கள் பல இவற்றை இரட்சிப்புக்கு அவசியமானவைகளாகக் கருதுகின்றன) ஆகியவை குறிப்பிடப்படாதிருக் கையில், ஞானஸ்நானம் அடிக்கடி குறிப்பிடப்படுவது ஏன்?*

*நடபடிகளின் புத்தகத்தில் பின்வரும் ஒப்பீடுகள் செய்யப்பட முடியும்.*

*அ. பின்வருவனவற்றைச் செய்யும்படி கிறிஸ்தவரல்லாதவர்களுக்குக் கூறப்பட்ட வேளைகளின் எண்ணிக்கை:*

1. *விசுவாசி(யுங்கள்) - மூன்று (அப். 8:37; 10:43; 16:31).*
2. *மனந்திரும்புகள் - மூன்று (அப். 3:19; 17:30; 26:20).*
   *மனந்திரும்பி விசுவாசியுங்கள் - பூஜ்யம்.*
   *மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள் - ஒன்று (அப்.2:38).*

3. ஞானஸ்நானம் பெறுங்கள் - மூன்று (அப். 2:38; 10:48; 22:16). ஞானஸ்நானம் பெற்று மனந்திரும்புங்கள் - ஒன்று (அப். 2:38). ஞானஸ்நானம் பெற்று அறிக்கையிடுங்கள் - பூஜ்யம்.
4. அறிக்கையிடுங்கள் - பூஜ்யம்.

ஆ. இந்த உடனடி பதில்செயல்கள் லூக்காவினால் அறிவிக்கப்பட்ட முறைகளின் எண்ணிக்கை:

1. விசுவாசித்தனர் - பன்னிரெண்டு (அப். 4:4; 8:12, 13; 9:42; 11:17, 21; 13:12; 13:48; 14:1; 17:12, 34; 18:8).
2. ஞானஸ்நானம் பெற்றனர் - ஒன்பது (அப். 2:41; 8:12, 13, 38; 9:18; 16:15, 33; 18:8; 19:5).
3. மனந்திரும்பினர் - பூஜ்யம்.
4. அறிக்கையிட்டனர் - ஒன்று (அப். 8:37 உண்மையான தெனில்; இல்லையென்றால் பூஜ்யம்).
5. விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் - மூன்று (அப். 8:12, 13; 18:8).
6. மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் - பூஜ்யம்.
7. மனந்திரும்பி அறிக்கையிட்டனர் - பூஜ்யம்.

இ. மக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்த நிகழ்ச்சிகளினால் இந்த பதில்செயல்களை லூக்கா அறிக்கையிட்ட முறைகளின் எண்ணிக்கை:

1. விசுவாசித்தனர் - பதிமூன்று (அப். 2:44; 4:32; 11:17; 14:23; 15:5; 16:1, 34; 18:27; 19:2, 18; 21:20, 25; 22:19).
2. ஞானஸ்நானம் பெற்றனர் - ஒன்று (அப். 8:16).
3. மனந்திரும்பினர் - பூஜ்யம்.
4. அறிக்கையிட்டனர் - பூஜ்யம்.

இந்த ஒப்பீடுகளில் இருந்து, நடபடிகளின் புத்தகத்தில் மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றைக் காட்டிலும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் என்பது அதிக முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாய் உள்ளது. கிறிஸ்தவர்களானவர்களைப் பற்றிக் கூறுகையில் அவர்கள் விசுவாசித்து மற்றும்/அல்லது ஞானஸ்நானம் பெற்றனர் என்றே நடபடிகளின் புத்தகம் வழக்கமாய் எடுத்துரைக்கின்றது; ஆனால் அவர்கள் மனந்திரும்பினர் என்றோ அல்லது அறிக்கையிட்டனர் என்றோ எடுத்துரைக்கும் வசனப் பகுதி எதுவும் இல்லை.

## பவுலின் நிருபங்களில் ஞானஸ்நானம்

புது உடன்படிக்கையின் ஞானஸ்நானம் பற்றிப் பவுல் சபைகளுக்கு எழுதிய தம் நிருபங்கள் பெரும்பான்மையானவற்றில் குறிப்பிட்டார் (ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13-17; 12:13; கலா. 3:27; எபே. 4:5; கொலோ. 2:12). ஞானஸ்நானத்தின் இயல்பான விளைவென்ற வகையில் உறுப்பினர்கள் இயேசுவுக்குத் தங்களை அர்ப்பணிப்பதில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் உற்சாக மூட்டினார். ஞானஸ்நானத்தைப் பவுல்

*ஒரு புது வாழ்வைத் துவங்குவதுடனும் (ரோமர் 6:4; கொலோ. 2:12, 13), அக்கிரமங்கள் மன்னிக்கப்படுதலுடனும் (கொலோ. 2:13), இயேசுவை அணிந்து கொள்ளுதலுடனும் (கலா. 3:27), மற்றும் விசுவாசிகளின் ஒருமைப்பாட்டுடனும் (1 கொரி. 12:13; கலா. 3:27, 28; எபே. 4:1-6) இணைத்துரைத்தார். பவுல் ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால் இதனை அவர் விசுவாசம், மனந்திரும்புதல் அல்லது அறிக்கையிடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக உள்ளன என்பது பற்றி அவர் ஏதொன்றும் கூறவில்லை. அவர் மற்ற வசனப் பகுதிகளில் ஞானஸ் நானத்தைப் பற்றி மறைமுகமாய்க் குறிப்பிட்டிருக்கலாம் (எபே. 5:26; தீத்து 3:5).*

## பேதுருவின் எழுத்துக்களில் ஞானஸ்நானம்

*பேதுரு விசுவாசத்தை/நம்பிக்கையைப் பற்றி நான்கு முறைகளும் (1 பேது. 1:8, 21; 2:6, 7) மற்றும் விசுவாசத்தைப் பற்றி ஏழு முறைகளும் (1 பேது. 1:5, 7, 9, 21; 5:9; 2 பேது. 1:1, 5) குறிப்பிட்டார், ஆனால் இதனை இரட்சிப்புடன் தொடர்புடையதாக அவர் ஒரு தரம் மட்டுமே குறிப்பிட்டார் (1 பேது. 1:9). எல்லா மக்களும் மனம்திரும்பும்படி தேவன் விரும்புவதாகக் கூறிய ஓரிடத்தில் மட்டும் அவர் (பேதுரு) மனந்திரும்பு தலைப் பற்றிக் கூறினார் (2 பேது. 3:9). அறிக்கையிடுதலைப் பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை.*

*நோவாவும் அவரது குடும்பத்தாரும் தப்புவிக்கப்பட்டதைப் பேதுரு நமது இரட்சிப்புடன் ஒப்பிட்டார்:*

> *அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்து வினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேது. 3:20, 21).*

## தொகுப்புரை

*ஞானஸ்நானம் என்பது முதலில் யோவானாலும், பிறகு இயேசுவாலும், பிறகு அப்போஸ்தலர்களாலும் மற்றும் ஆதி சபையாராலும் போதிக்கப் பட்டது. சிலுவையில் இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, சுவிசேஷத்தில் போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, தேவனுடன் ஒரு புது உறவையும் ஒரு புது வாழ்வை யும் நாடியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஞானஸ்நானம் என்பது தேவனுடனான தவறான உறவுமுறையானது இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நேராக்கப்படும் வேளையென்றும், ஒரு புதுவாழ்வு தொடங்கிய வேளை என்றும் கருதப்பட்டது.*